From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 1/2011

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : அக்கினி என்ற அசோக் | Father/Husband Name | : ஆனைமலை |
| Age | : | Calling | : |
| Date | : 27.01.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 27 day of 01.2026.

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிகள் ஆஜர் இல்லை.

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் மேலூர் தாலுகா, சிட்டம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். அசா1 ராமசாமி எனது அண்ணன். அசா1 ன் வீட்டிற்கு எதிர் வீட்டில்தான் குடியிருந்து வந்தேன். கடந்த 2008 ம் வருடம் சுமார் காலை 06.00 மணியளவில் அசா1 ராமசாமி எனது வீட்டில் வந்து என்னை எழுப்பினார். அப்போது எனது வீட்டில் எனது அப்பா, அம்மா, நான் மூவரும் இருந்தோம். அசா1 என்னிடம் அவரது வீட்டில் உள்ள பீரோ திறந்து இருப்பதாக சொன்னார். நானும், பட்டியல் சாட்சிகளான ஆனைமலை, மற்றும் சாந்தா தேவி, அசா1 ன்வீட்டிற்குள் சென்று பார்த்தோம். அப்போது பீரோ திறந்து அனைத்து பொருட்களும் சிதறி கிடந்தது, பீரோவின் லாக்கர் திறந்து இருந்தது. அசா1 என்னிடம் பீரோவில் வைத்திருந்த 12, 13 பவுன் நகைகள் காணவில்லை என்று சொன்னார். அசா1 னிடம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னேன். அவர் ஊர் பெரியவர்களுடன் ஒத்தக்கடை காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தார். இதுசம்மந்தமாக போலீசார் என்னை

விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

அசா1 ற்கு நான் என்ன உறவு முறை என்றால் நான் அவரது உடன்பிறந்த சகோதரர். அசா1 காலையில் தான் என்னிடம் தகவல் சொன்னாரா என்றால் ஆம், பார்த்தவுடன் என்னிடம் சொன்னார். இரவு எத்தனை நபர், யார் திருடு வந்தார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 1/2011

Deposition of witness for: PW - 2

Name : ராமலெட்சுமி Father/Husband Name : ராமசாமி

Age : Calling :

Date : 27.01.2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 27 day of 01.2026.

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

**எதிரிகள் ஆஜர் இல்லை.**

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் மேலூர் தாலுகா, சிட்டம்பட்யில் குடியிருந்து வருகிறேன். வீட்டு குடித்தனம் செய்து வருகிறேன். எனது திருமணம் ஆன சமயத்தில் 2008 ம் வருடம் தேதி, மாதம் ஞாபகம் இல்லை. அதிகாலை 01.00 மணி போல் எனது மகன் அழுதுதனால் நான் எழுந்து பார்த்தேன், எனது அறையில் இருந்த பீரோ திறந்து இருந்தது. நான் பீரோ திறந்து பார்த்திருப்பதை பார்த்து கத்தியவுடன் எங்கள் வீட்டில் இருந்த அனைவரும் வந்து பார்த்தார்கள். பீரோவில் வைத்திருந்த சுமார் 20, 22 பவுன் தங்க நகைகளான மாலை, கைசெயின், குழந்தைளின் தங்க தோடு, கொழுசு, செயின், மோதிரம், ஆகியவை பீரோவில் இல்லை. திருட்டுபோயிருந்த விவரத்தை தெரிந்துகொண்டு அசா1 மற்றும், மாமனார் ஆகியோர் ஒத்தக்கடை காவல் நிலையம் சென்று அன்றையதினமே புகார் கொடுத்தார்கள். இதுசம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317 ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

சம்பவம் நடந்த அன்று அசா1 ஆன எனது கணவர் என்னுடன்தான் இருந்தார் என்றால் சரிதான். அசா1, ஒத்தக்கடை காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்னர் என்னிடம் ஆலோசானை செய்து, கலந்து பேசி அதன்பின்னர் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். புகார் மனு அசா1 காவல்

நிலையத்தில் வைத்து எழுதினாரா அல்லது வீட்டில் வைத்து எழுதினாரா என்றால் காவல் நிலையத்தில் வைத்து எழுதினார். போலீசார் என்னை விசாரித்தபோது எங்கள் வீட்டில் 20, 22 பவுன் நகை காணாமல் போன விவரத்தை சொன்னேன் என்றால் சரிதான். செயினில் பல விதமான செயின்கள் உள்ளது என்றால் சரிதான். அசா1 கொடுத்த புகாரில் எந்த வகையான செயின் என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 1/2011

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : ராமசாமி | Father/Husband Name | : ஆனைமலை |
| Age | : | Calling | : |
| Date | : 27.01.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 27 day of 01.2026.

( சாட்சி சத்தியப்பிர மாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).

எதிரிகள் ஆஜர் இல்லை.

அரசுதரப்பில் முதல்விசாரணை

நான் தற்போது மேலூர் தாலுகா, சிட்டம்பட்டியில் குடியிருந்து வருகிறேன், சக்ரா டயர்ஸ்ல் ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். 28.11.2008ம் தேதி நான் எனது வீட்டில் தூங்கிக்கொண்டிருந்தபோது காலை 04.00 மணியளவில் நான் எழுந்தபோது எனது வீட்டில் உள்ள பீரோ திறந்து இருந்தது. பீரோவில் இருந்த நகை பெட்டி திறந்து வெளியே கிடந்தது. அப்போதுதான் அதில் வைத்திருந்த நகை திருடு போன விவரம் தெரிந்தது. அந்த பெட்டியில் வைத்திருந்த 4 பவுன் தங்க மாலை, கை செயின் 2 பவுன், மோதிரம் 1/2 பவுன், மைனர் செயின் 1 பவுன், மற்றொரு 4 பவுன் தங்க மாலை, இதனுடன் சேர்ந்து சில நகைகள் காணவில்லை, ஆக மொத்தம் 12 பவுன், 7 கிராம் தங்க நகை காணாமல் போயிருந்தது. திருடு போன விவரங்களை எனது வீட்டிலிருந்த எனது தந்தை, தாய், மனைவி மற்றும் தம்பியிடம் சொன்னேன், அதன்பின்னர் அன்றையதினமே ஒத்தக்கடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் தற்போது காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த புகார் மனு அசாஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ),** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

எனது வீட்டிலிருந்து காணாமல் போன அனைத்து பொருட்களும் கிடைத்துவிட்டதா என்றால் கிடைத்துவிட்டது. புகாரில் சொல்லப்படாத எந்த பொருளையும் நான் நீதிமன்றத்திலிருந்து பெறவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்து எதிரிகளை என்னிடம் அடையாளர் காண்பித்தார்கள் என்றால் இல்லை. நான் எனது வீட்டில் திருட்டு நடந்த

சமயத்தில் நான் நன்கு தூங்கிகொண்டிருந்தேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் அங்கு வந்து யார் திருடினார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.